**சார்பு நீதிமன்றம், இராணிப்பேட்டை**

**OS.NO.88/2015** **தேதி.**06.02.2026

இந்த நீதிமன்ற உதவியாளர் நிலை – 2 திருமதி. பிரியா என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு ............... வா.சா.1 ...................... சாட்சியின் வாக்குமூலம் 1973 ஆம் ஆண்டு 10 வது சட்டத்தின் வகைமுறைகளுக்கு உட்பட்டு 2026 ம் ஆண்டு 30.01.2026 ம் நாளில் பதிவுச் செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் | திருமதி.லஷ்மி லதா |
| க/பெ. | திரு.கருணாநிதி |
| வயது | 53/2026 |

துவக்க நேரம் 12.25 P.M

சாட்சி முன்னிலை உறுதிமொழி செய்துவைக்கப்பட்டார்.

1 ம் பிரதிவாதிகளின் வாரிசுதாரர்கள் 3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–(1 ம் பிரதிவாதி தரப்பில் ஏற்கனவே குறுக்கு விசாரணை பகுதியாக எடுக்கப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக தேதி வைக்கப்பட்டிருந்தநிலையில் 1 ம் பிரதிவாதி இறந்துவிட்டார், அதன்பேரில் 1 ம் பிரதிவாதியின் வாரிசுகளான 3 முதல் 5 பிரதிவாதிகள் இவ்வழக்கில் சேர்கப்பட்டுள்ளனர், எனவே 1 ம் பிரதிவாதி குறுக்கு விசாரணையை எங்கு முடித்தாரோ அதிலிருந்து 3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி இன்று மேற்கொள்ளப்படுகிறது):–

1. நான் என்ன படித்துள்ளேன் என்றால் பி.காம் படித்துள்ளேன். வழக்கு சொத்துக்கள் எனது தாய் வழிப் பாட்டனாருக்கு உரிமையான சொத்துக்கள் என்றால் சரிதான். எனது தாயாருடன், சந்திராம்மாள், பிரேமா அம்மாள், காசி (எ) வரதம்மாள் ஆகியோர்கள் உடன்பிறந்த சகோதரிகள் என்றால் சரிதான். என் தாயாரும், அவரது சகோதரிகளும் கடந்த 22.09.1997 அன்று எனது தாய் வழிப் பாட்டனாரின் சொத்துக்களை பிரித்துக்கொண்டார்கள் என்றால் ஆமாம்.

2. கடந்த 1997ம் ஆண்டு பாகப்பிரிவினையின்பொழுது, RR Salai –ல் எனது தாயாருக்கும், அவரது மற்ற சகோதரிகளுக்கும் ஒவ்வொரு பாகம் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். இறந்துபோன சுரேஷ் கண்ணன் என்பவர் எனது சகோதரர் என்றால் ஆமாம். இறந்துபோன எனது சகோதரர் சுரேஷ் கண்ணன் கடந்த 21.08.2002ல் எனது சின்ன பாட்டி வரதம்மாள் என்பவரிடம் 1376 ச.அ நிலத்தை கிரையம் பெற்றார் என்றால் எனக்கு தெரியாது.

3. இந்த வழக்கில் சுரேஷ் கண்ணன் என்ன பதில் தாக்கல் செய்துள்ளார் என்று எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. கடந்த 02.01.2003ல் எனது சகோதரர் சுரேஷ் கண்ணன், பேபி அம்மாள் என்பவரிடம் 1125 ச.அ நிலத்தை கிரையம் பெற்றார் என்றால் எனக்கு தெரியாது. எனது தாயாருக்கு RR Salai –ல் வந்த பாக சொத்தை அப்படியே எனது சகோதரருக்கு தான செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்துவிட்டார் என்றால் எனக்கு தெரியாது.

4. RR Salai –ல் உள்ள சொத்திற்கு யார் பெயரில் வரி வருகிறது என்றால் தெரியாது. 2ம் பிரதிவாதி கௌதம் சந்த் என்பவரை எதற்காக இந்த வழக்கில் சேர்த்துள்ளேன் என்றால் அவர் சொத்தை வாங்கப்போவதாக கேள்விப்பட்டோம், அதனால் சேர்த்தோம். 2ம் பிரதிவாதி சொத்தை வாங்கினாரா, இல்லையா என்று இதுநாள்வரை எனக்கு தெரியாது என்றால் தெரியும், அம்மாவினுடைய கடையை வாங்கியுள்ளார். 2ம் பிரதிவாதி கிரையம் வாங்கியதாக நான் சொல்லும்நிலையில் அதற்கான ஆவணத்தை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன்.

5. இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பு, 2ம் பிரதிவாதி சொத்தை வாங்கப்போவதாக எப்பொழுது எனக்கு தெரியவந்தது என்றால் குறிப்பிட்டு சொல்லமுடியாது, வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக சொத்தை வாங்கப்போவதாக கேள்விப்பட்டேன். எனது தகப்பனார், ஆஞ்சநேயர் கோயில் தெருவில் உள்ள சொத்தை உயில் எழுதி கொடுத்ததாக சொல்லிதான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

6. இந்த வழக்கில் அசல் உயிலை தாக்கல் செய்யவில்லை என்றாலும், சான்றிட்ட நகல் மட்டும்தான் தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரிதான்.

அசல் எனது அப்பாவிடம் உள்ளது. எனது வழக்கிலும், பிரமாண வாக்குமூலத்திலும் அசல் உயில் எனது தகப்பனாரிடம் உள்ளதாகவும் நகல்தான் எனக்கு கொடுத்தார் என்றும் குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

7. எனது அப்பா உயில் எழுதிவைத்ததாக சொல்லப்படும் தேதிக்கு பிறகு தாவா சொத்தில் எந்தவொரு வில்லங்கமும் இல்லை என்பதற்கு நான் வில்லங்க சான்றிதழை தாக்கல் செய்துள்ளேனா என்றால் 35 ஆண்டுகளுக்கு வில்லங்க சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேன். என்னிடம் தாக்கல் செய்த பிரமாக வாக்குமூலத்தில் வில்லங்க சான்றிதழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக உள்ளதா என்றால் இல்லை.

8. நான் தாக்கல் செய்துள்ள உயில் (வா.சா.ஆ.3) எனது தகப்பனாரால் கடந்த 2009ம் ஆண்டு ரத்து செய்யப்பட்டுவிட்டது என்றால் சரிதான். அதன்பின்னிட்டு கடந்த 2009ம் ஆண்டே எனது தகப்பனாரர், எனது சகோதரர் சுரேஷ் கண்ணன் பெயருக்கு அதே சொத்தை உயில் எழுதிவைத்தார் என்றால் எனக்கு தெரியாது. எனது தாயார் கடந்த 2010ல் இறந்துவிட்டார் என்றால் சரிதான்.

9. RR salai –ல் உள்ள சொத்திற்கு என் பெயரில், வரி, பட்டா எதுவும் இல்லை என்றால் சரிதான். எனது தகப்பனார் கடந்த 2014ல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். எனது தகப்பனார் உயிரோடு இந்த காலத்தில் என் பெயருக்கு எழுதிவைத்த உயிலின் அசலை நான் கேட்டு பெறவில்லை என்றால் கேட்டேன், நகல் உள்ளது அதுவே போதும் என்று சொல்லிவிட்டார்.

10. இன்றைய தேதி வரை RR Salai –ல் உள்ள சொத்துக்களில் ஒரு பகுதியை 2ம் பிரதிவாதிக்கு விற்றதுபோக எனது சகோதரர்தான் அனுபவித்து வருகிறார் என்றால் வாடகையும் அவர்தான் வாங்குகிறார், அவர்தான் அனுபவித்து வருகிறார். ஆஞ்சநேயர் கோயில் உள்ள சொத்தும், எனது சகோதரர் அனுபவத்தில்தான் உள்ளது என்றால் ஆமாம், அவர்தான் அனுபவித்துக்கொண்டு வாடகை பெற்று வருகிறார்.ஆஞ்சநேயர் கோயில் தெருவில் உள்ள சொத்திற்கான வரி எனது சகோதரர் பெயரில்தான் வருகிறது என்றால் சரிதான்.

11. எனது தகப்பனார் எனக்கு ஏற்படுத்திக்கொடுத்த உயிலை ரத்துசெய்துவிட்டதால் நான் இந்த வழக்கில், உயிலின் அடிப்படையில் எந்தவித விளம்புகை பரிகாரமும் கோரமுடியாது என்றால் சரியல்ல. பாக வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பாக பாகம் கேட்டு எனது சகோதரருக்கு ஏதேனும் சட்ட அறிவிப்பு அனுப்பினேனா என்றால் இல்லை.

12. எனது தாயார் எனது சகோதரர் பெயருக்கு ஏற்படுத்திய தான செட்டில்மெண்ட் பத்திரமும், எனது தகப்பனார் என சகோதரர் பெயரில் ஏற்படுத்திய உயில் ஆவணமும் செல்லாது என பரிகாரம் கேட்டுள்ளேனா என்றால் கேட்டுள்ளேன். நான் நடக்காத சங்கதிகளை நடந்ததாக சொல்லியும், உண்மை சங்கதிகளை மறைத்தும் நான் விளம்புகை பரிகாரம் வேண்டியுள்ளது ஏற்க்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

13. தாவா சொத்தின் மதிப்பு ரூ.30,00,000/-க்கு மேல் இருக்கும் என்றாலும், சொத்தின் மதிப்பை குறைத்துக்காட்டி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், இந்த வழக்கை சொத்து மதிப்பின் அடிப்படையில் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யமுடியாது என்றாலும் சரியல்ல. இந்த வழக்கில் எந்தவித பரிகாரத்தையும் கோரமுடியாது என்றாலும், செலவுத்தொகையுடன் வழக்கை தள்ளுபடி செய்யவேண்டுமென்றாலும் சரியல்ல.

மறு விசாரணை:- இல்லை.

முடிவு நேரம் 1.10 P.M

Taken down before by me in open court read over / intarpreted is the witness and Acknowleged by him/her to be correct.

Subordinate Judge,
Ranipet.